**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 341/2019 |
| Name | : Ramachandran |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம் தாலுாக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 05.11.2017 ம் தேதி கொமரலிங்கம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்களுக்கு கிடைத்த மணல் திருட்டு சம்மந்தமான ரகசிய தகவலின் பேரில் நானும், உதவி ஆய்வாளர் சண்முகம், காவலர் 760 முருகன் ஆகியோர்களுடன் பழநி – கொழுமம் ரோட்டில் குதிரையாறு செக் போஸ்ட் அருகில் காலை 06.00 மணிக்கு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த Bajaj Tempo Trax TN 38 AJ 0969 வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது வாகனத்தில் ஆற்று மணல் இருந்தது தெரிய வந்தது அந்த வாகனத்தை ஓட்டி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் ராஜசேகர் மற்றும் உடன் இருந்த கௌரிசங்கர் இருவரையும் விசாரித்த போது அவர்கள் அரசுக்கு சொந்தமான குதிரையாற்று மணலை திருடி வந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை உதவி ஆய்வாளர் அவர்கள் கைதிற்காக காரணம் கூறி காலை 07.00 மணிக்கு கைது செய்து அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள்

யாரும் இல்லாததால் உடன் இருந்த காவலர்கள் நானும், காவலர் முருகன் என்பவரும் காலை 07.30 மணிக்கு Bajaj Tempo Trax வாகனத்தையும் அதில் இருந்த ¾ யூனிட் ஆற்று மணலையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினோம். கைப்பற்றுதல் மகஜரில் நானும், உடன் இருந்த காவலரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பின்பு காலை 08.30 மணியளவில் காவல் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனத்தில் தான் எதிரிகள் அன்று மணல் கடத்தி வந்த வாகனம் ஆகும். **புகைப்படம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிகளில் ஒருவர் தான் அன்று மணல் கடத்தி வந்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.காமேஷ்குமார் Ms.No.7383/2024 நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

(1) அமராவதி ஆற்றுக்கும், சோதனை சாவடிக்கும் சுமார் ½ கி.மீ தூரம் இருக்கும். 1 யூனிட் ஆற்று மணல் என்பதை எவ்வாறு அளக்கப்பட்டது என்றால் தோராயமாக 1 யூனிட் என்று முடிவு செய்தோம். வாகனத்தின் பின்புபுறம் மணல் நிரப்பப்பட்டு கொண்டு வரப்பட்டது. வாகனத்தில் இருந்து வேறு எந்த பொருளையும் நாங்கள் கைப்பற்றவில்லை. சோதனைச் சாவடிக்கு நான் காலை 06.00 மணிக்கு சென்றேன். காலை 07.00 மணிக்கு கைது செய்வதற்கு 10–20 நிமிடங்கள் முன்னர் தணிக்கை அறிக்கை தயார் செய்யப்பட்டது. தணிக்கையில் ஈடுபடாமல் எதிரிக்கு எதிராக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:45:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 341/2019 |
| Name | : Murugan |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.11.2017 ம் தேதி காலை 06.00 மணிக்கு கொமரலிங்கம் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் சண்முகம் மற்றும் காவலர் 599 ராமச்சந்திரன் ஆகியோர் அலுவலில் இருந்த போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் உடன் நானும், காவலரும் குதிரையாறு செக் போஸ்டில் வாகன தணிக்கை செய்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நான்கு சக்கர வாகனம் ஒன்றை தணிக்கை செய்த போது மேற்படி வாகனமானது Bajaj Tempo Trax TN 38 AJ 0696 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை பாப்பம்பட்டியைச் சேர்ந்த ராஜசேகர் என்பவர் ஓட்டியும், அதன் அருகில் கௌரிசங்கர் என்பவர் உட்கார்ந்து வந்தார். உதவி ஆய்வாளர் தணிக்கை செய்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார். பிறகு தனது முகவரியை ஒப்புக்கொண்டும் வாகனத்தில் அரசுக்கு சொந்தமான கனிம வளமான மணல் சுமார் ¾ யூனிட்டை வண்டியில் திருட்டுத்தனமாக தங்களது சுயலாப நோக்கத்தோடு எடுத்து வந்ததை ஒப்புக்கொண்டார்.

பிறகு உதவி ஆய்வாளர் சுமார் 07.00 மணிக்கு எதிரிகளை கைதிற்காக காரணம் கூறி எடுத்துக் கூறி கைது செய்தும் 07.30 மணியளவில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும், காவலர் ராமச்சந்திரனும் உதவி ஆய்வாளர் கைப்பற்றிய மகஜரில் கையொப்பம் செய்தோம். பிறகு உதவி ஆய்வாளர் எதிரியையும், மேற்படி சொத்துக்களையும் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் சுமார் 08.30 மணிக்கு வந்து குற்ற எண். 246/2017 ச/பி 379 இதச–ன் உ/இ 36(A), 21(1) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைப்படத்தில் உள்ள வாகனத்தில் தான் எதிரிகள் அன்று மணல் கடத்தி வந்த வாகனம் ஆகும். ஆஜர் எதிரிகள் தான் அன்று வாகனத்தில் மணலை கடத்தி வந்தார்கள். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.காமேஷ்குமார் Ms.No.7383/2024 நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

(1) குதிரையாறு செக் போஸ்ட் என்பது அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரிகளை விசாரித்த போது அவர்கள் பாப்பம்பட்டி அருகே இருந்து மணலை எடுத்து வருவதாக சொன்னார்கள். மணல் எடுத்து வந்ததாக சொன்ன பகுதியை நாங்கள் ஆய்வு செய்தோமா என்றால் எனக்கு தெரியவில்லை. டெம்போவில் மணலை நிரப்பி எடுத்து வந்தார்கள். டெம்போவை மணலுடன் சேர்ந்து புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் உதவி ஆய்வாளர் புகைப்படம் எடுத்தார். வாகனத்தில் வேறு பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. மணல் மற்றும் வாகனம் கைப்பற்றப்பட்டது. மண் வெட்டி, சட்டி போன்ற பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

(2)பாப்பம்பட்டியில் இருந்த குதிரையாறு சோதனைச் சாவடி சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். வாகனத்தை தணிக்கை அறிக்கை செய்த போது மணி சுமார் 07.00 இருக்கும். ரகசிய தகவல் காலை 06.00 மணிக்கு கிடைத்தது. குதிரையாறு சோதனைச் சாவடிக்கு தகவல் சுமார் ¼ மணி நேரத்தில் சென்றோம். மணலின் அளவு வாகனத்தின் மொத்த கொள்ளவு எவ்வளவு இருக்கும் என்றால் 3/4 – 1 யூனிட் இருக்கும். வாகனத்தின் passing

capacity எவ்வளவு என்றால் அதைப் பற்றி தெரியாது. தணிக்கையில் ஈடுபடாமல் எதிரிக்கு எதிராக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:45:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 341/2019 |
| Name | : Thangavel |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தாராபுரம் கோட்ட கலால் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.11.2017 ம் தேதி உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக அலுவலில் இருந்த போது உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மூலமாக அனுப்பப்பட்ட கடித எண். 1202 நாள் 09.11.2017 ன் படி திருப்பூர் மாவட்ட கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண். 246/2017 ச/பி 379 இதச மற்றும் பிரிவுகள் 36(A) and 21(1) MMDR Act ன் படியான வழக்கில் பதிவு செய்யப்பட்ட சுமார் ¾ யூனிட் மணலை கொமரலிங்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் இருந்து பெற்றுக்கொண்டு அதற்கான ஒப்புதல் கடிதம் 11207/2017 அ2 நாள் 09.11.2017 படி உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 க்கு சமர்ப்பிக்கப்பட்டது. **09.11.2017 தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை**

**என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.காமேஷ்குமார் Ms.No.7383/2024 நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

(1) எவ்வளவு மணலை பெற்றுக்கொண்டேன் என்றால் சுமார் ¾ யூனிட் இருக்கும்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:45:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்